## November 12, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா குறைத்து வருவதால், அந்நாட்டின் மீது விதித்த வரி குறைக்கப்படும் என்று அமெ ரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரி வித்தார்.
   i. இந்தியா மீது அமெரிக்கா 50% வரியை விதித்துள்ளது.
   ii. ரஷிய கச்சா எண்ணெய்யை கொள்முதல் செய்ததால்தான் இந்தியா மீது அதிக வரி விதிக்க நேரிட்டது. ஆனால், இப்போது ரஷியாவில் இருந்து கொள்முதல் செய்வதை இந்தியா வெகுவாக குறைக்கத் தொடங்கிவிட்டது. எனவே, அமெரிக்காவும் தனது வரி விதிப்பை குறைக்க உத்தேசித்துள்ளது.
2. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் 525 கலைஞர்களுக்கு ரூ.85 லட்சத்துக்கான நிதியுதவியை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். இதற்கான நிகழ்ச்சி தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.
   i. தமிழக அரசின் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் சார்பில் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.
3. அமெரிக்கா முன்னிலையில் கம்போடியாவுடன் மேற்கொண்டுள்ள போர் நிறுத்த ஒப்பந்தத்தை தற்காலிகமாக நிறுத்திவைக்கப் போவதாக தாய்லாந்து எச்சரித்துள்ளது. கம்போடியாவுடனான எல்லைப் பகுதியில் கண்ணிவெடியில் சிக்கி தங்கள் நாட்டின் நான்கு வீரர்கள் காயமடைந்ததைத் தொடர்ந்து தாய்லாந்து இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.
   i. 11-ஆம் நூற்றாண்டு ஹிந்து கோயில் அமைந்துள்ள ப்ரேவிஹேர் பகுதியை மையமாகக் கொண்டு தாய்லாந்துக்கும், கம்போடியாவுக்கும் இடையே நீண்ட காலமாக எல்லைப் பிரச்னை நிலவிவருகிறது.
4. செலவுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய நாடாளுமன்ற அனுமதி இல்லாததால் அமெரிக்க அரசுத் துறைகள் முடக்கப்பட்டுள்ள நிலையில், அந்த முடக்கத்தை நீக்குவதற்கான மசோதா செனட் சபையில் நிறைவேற்றப்பட்டது.
   i. தங்களது கட்சி நிலைப்பாட்டை மீறி, அரசுத் துறைகளுக்கான நிதி ஒதுக்கீட்டில் சமரசம் செய்துகொள்ள சில ஜனநாயகக் கட்சி எம்.பி.க்கள் முன்வந்ததையடுத்து, இந்த மசோதா நிறைவேற்றப்பட்டது.
5. மலேசியா அருகே ரோஹிங்கயா அகதிகள் சென்று கொண்டிருந்த படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் உயிரிழந் தவர்களின் எண்ணிக்கை 26-ஆக உயர்ந்துள்ளது.
   i. மியான்மரில் துன்புறுத்தப்படுவதாகக் கூறப்படும் சிறுபான்மை முஸ்லிம் இனத்தவரான ரோஹிங்கயாக்கள், அண்டை நாடான வங்கதேசத்திலும், மலேசியா போன்ற பிற நாடுகளிலும் தஞ்சமடைந்து வருகின்றனர். வங்கதேசத்தில் மட்டும் 13 லட்சம் ரோஹிங்கயா அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.
6. பூடானுக்கு இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக சென்ற பிரதமர் மோடி, தலைநகர் திம்புவில் அந்நாட்டின் மன்னர் ஜிக்மே கேசர் நாம்கியால் வாங்சுக்கை சந்தித்துப் பேசினார்.
   i. அப்போது, அந்நாட்டுக்கு ரூ.4,000கோடி கடனுதவி இந்தியா அறிவித்தது.
   ii. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, சுகாதாரம்-மருந்துகள், மனநல மருத்துவ துறைகளில் மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன.
   iii. எரிசக்தி, திறன்மேம்பாடு, போக்குவரத்து இணைப்பு, தொழில்நுட்பம், பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் ஆலோசித்தனர்.

iv. வாரணாசியில் பூடான் சார்பில் புத்த மடாலயம் கட்ட நிலம் வழங்கப்படும் என்ற அறிவிப்பும் வெளியிடப்பட்டது.

v. பூடானில் இந்தியாவின் உதவியுடன் கட்டமைக்கப்பட்ட 1,020 மெகாவாட்மின் உற்பத்தித் திறன் கொண்ட புனத்சங்சு-2 நீர் மின் நிலையத்தை இருவரும் கூட்டாக திறந் துவைத்தனர். இது, இருதரப்பு நட்புறவின் அடையாளம் என்று பிரதமர் மோடி குறிப் பிட்டார்.

7. போருக்கான ஆயத்த நிலையை வலுப்படுத்தவும், மிக உயர்ந்த மலைப் பிரதேசங்களில் திறனை மேம்படுத்தவும் அருணாசல பிரதேச எல்லைப் பகுதியில் இந்திய ராணுவத்தின் டாவோ பிரிவு களப்பயிற்சியில் ஈடுபட்டது.

i. எதிரி நாடுகளுக்கு தந்திர ரீதியில் பதிலடி கொடுப்பது, குழுவாகப் பணியில் ஈடுபடுவதை மேம்படுத்துவது ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் இந்தப் பயிற்சி நடத்தப்பட்டது. ஒருங்கிணைந்த திட்டமிடல், சரக்குப் போக்குவரத்து மேலாண்மை, தகவல் தொடர்பு கட்டமைப்புகள் ஆகியவை இந்தப் பயிற்சியின்போது சோதிக்கப்பட்டன.